டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்

agridoctor.in | 22.04.2026 புதன்கிழமை | பக்கங்கள் 24 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 252 - Madurai | Online Edition

# மேற்காசியா சூழல் : கிராமப்புற திட்டங்களைப் பாதுகாக்கும் வகையில் தயார் நிலையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள்

புது தில்லி, ஏப்.21

மேற்காசியாவில் நிலவி வரும் சூழல் குறித்து ஊடகங்களுக்கு தொடர்ந்து தகவல் அளிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக மத்திய அரசு தேசிய ஊடக மையத்தில் விளக்கக் கூட்டம் ஒன்றுக்கு நேற்று ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் கூட்டத்தில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப்போக்குவரத்து மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டு நாட்டில் உள்ள எரிபொருள் கையிருப்பு, கடல்சார் நடவடிக்கைகள், மேற்காசிய நாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்கு வழங்கப்படும் உதவிகள், முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் நிலைத்தன்மையை பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்த விவரங்களை வழங்கினர்.

மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கியத்துவம் வாய்ந்த கிராமப்புற மேம்பாடு மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களை தடையின்றி செயல்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய தயார் நிலை குறித்த விரிவான மறு ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்து உள்ளது. மேற்காசியாவில் நிலவும் சூழலைக் கருத்தில் கொண்டும், உலகளவில் விநியோக நடைமுறைகளில் ஏற்படும் தாக்கத்தால் பொருட்களின் விலைவாசி மற்றும் பணவீக்க விகிதங்களின் ஏற்படும் தாக்கங்களை மதிப்பிடும் வகையில் இந்த மறுஆய்வு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## வேலைவாய்ப்பு பாதுகாப்பு மற்றும் ஊதிய ஆதரவு

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஜி ராம் ஜி என்ற புதிய சட்டத்தின் அமலாக்கம் வரை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டம் 2005 முழுமையான செயல்பாட்டில் தொடரும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. கிராமப்புறத்தில் உள்ள குடும்பங்களுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்புகள் எவ்வித தடையுமின்றி தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தேவை அடிப்படையிலான வேலை வாய்ப்பு, உரிய நேரத்தில் சம்பள பட்டுவாடா, முழு அளவிலான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது உட்பட அனைத்து சட்டப்பூர்வ நடவடிக்கைகளும் தொடரும் என்றும், ஏற்கனவே மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதங்கள் தொடர்ந்து அமலில் இருக்கும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மின்சார விநியோகம் மற்றும் எரிபொருள் கையிருப்பு

நாடு முழுவதும் சமையல் எரிவாயு மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயு பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் நேரடியாக அவற்றை விநியோகம் செய்யும் நிறுவனங்களுக்கு செல்வதை தவிர்த்து டிஜிட்டல் தளம் மூலம் சிலிண்டருக்கான பதிவை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மக்கள் மாற்று எரிபொருளாக குழாய் மூலம் விநியோகிக்கப்படும் இயற்கை எரிவாயு, மின்சாரம் அல்லது இன்டக்சன் அடுப்புகளை பயன்படுத்த ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# டெல்டா, தென் தமிழக கடலோர மாவட்டங்களில் மிதமான மழை வாய்ப்பு!

சென்னை, ஏப்.21

தமிழகத்தில் வரும் 27-ம் தேதி வரை டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. வடக்கு சத்தீஸ்கர் முதல் குமரிக் கடல் வரை தெலங்கானா, உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில், ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங் களின் கடலோர பகுதிகளில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இன்று (ஏப்.22) லேசானது முதல் மிதமான மழையும், நாளை 23 முதல் 25ம் தேதி வரை லேசான மழையும், 26, 27 தேதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

உள் தமிழக மாவட்டங்களில் இன்று முதல் 25ம் தேதி வரை அதிகபட்ச வெப்ப நிலை ஒரு சில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும். கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் எளிமையான, சத்தான மற்றும் கண்கவர் உணவுகளே மிகவும் பொருத்தமானவை - ஓர் அலசல்

நேற்றைய தொடர்ச்சி...

### அடுப்பில்லா சமையல் குறிப்புகள் சில என்னென்ன?

**செய்முறை 6 : பழம் மற்றும் தயிர் பாப்சிக்கிள்ஸ்**



புத்துணர்ச்சி தரும் இந்த பாப்சிக்கிள்கள், குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்கான மிகச் சரியான செய்முறை யாகும். ஏனெனில், இவற்றைச் செய்வது மிகவும் எளிது, மேலும் உங்கள் பிள்ளைக்குப் பிடித்த பழங்களைச் சேர்த்து ஒரு மகிழ்ச்சியான அனுபவத்தைப் பெறலாம்.

இந்த ஆரோக்கியமான பழம் மற்றும் தயிர் பாப்சிக்கிள்களில் சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை இல்லை. மேலும் இவை ஆன்டி ஆக்ஸிடன்ட்கள், புரதம் மற்றும் கால்சியம் ஆகிய வற்றால் நிரம்பியுள்ளன. இனி நீங்கள் உங்கள் சூப்பர் மார்க்கெட்டில் உள்ள உறைவிப்பான் பகுதியைத் தவிர்த்துவிட்டு, உங்கள் குழந்தைகளுடன் வீட்டிலேயே பாப்சிக்கிள்களைத் தயாரிக் கலாம்.

**தேவையான பொருட்கள்**

- தயிர்
- தேன்
- கனமான

● கிரீம்

● உங்களுக்கு விருப்பமான பழங்கள் அல்லது பெர்ரி வகைகள்

● பாப்சிக்கிள் அச்சுகள் (பாப்சிக்கிள் அச்சுகளுக்கான அமேசான் பக்கத்திற்குச் செல்ல இதைச் சொடுக்கவும்)

குறிப்பு : நீங்கள் பாப்சிக்கிள் அச்சுகளை வாங்க விரும்பவில்லை என்றால், ஆழமான ஐஸ் கியூப் தட்டுகள், சிறிய தயிர் கொள்கலன்கள், காகிதக் கோப்பைகள், பிளாஸ்டிக் கோப்பைகள் மற்றும் மஃபின் தட்டுகளைப் பயன்படுத்தலாம்.

**எப்படித் தயாரிப்பது**

படி 1 : ஒரு கிண்ணத்தில் கிரீமை விஸ்க் கொண்டு அடிக்கவும்.

படி 2 : ஒரு கிண்ணத்தில் தயிர் மற்றும் தேனை மெதுவாகக் கலக்கவும்.

படி 3 : உங்கள் குழந்தைகளுக்குப் பிடித்த பழங்களைக் கிண்ணத்தில் சேர்க்கவும்.

படி 4 : கலவையை பாப்சிக்கிள் அச்சுகளில் ஊற்றத் தொடங்குங்கள்.

படி 5 : உங்கள் தயிர் மற்றும் பழக் கலவையின் நடுவில் சாப்ஸ்டிக் அல்லது பாப்சிக்கிள் குச்சிகளை வைத்து, ஏதேனும் காற்று குமிழ்கள் இருந்தால் அவற்றை நீக்குவதற்காக பாப்சிக்கிள்களை மேசையின் மீது தட்டவும்.

படி 6 : உறைவிப்பான் பெட்டிக்கு மாற்றவும். குறைந்தது 4-5 மணி நேரம் உறைய வைக்கவும்.

படி 7 : ஆஹா! உங்கள் உறைந்த இனிப்புப் பண்டத்தைச் சுவைத்து மகிழுங்கள்.

**செய்முறை 7 : அவகேடோ டோஸ்ட்கள்**

அவகேடோ டோஸ்ட்கள் செய்வதற்கு எளிமையானவை. காலை உணவாகவோ அல்லது சிற்றுண்டியாகவோ அவகேடோவுடன் காய்கறிகளைச் சாப்பிட குழந்தைகளை ஊக்குவிப்பதற்கு இது மிகவும் வேடிக்கையான ஒரு செய்முறையாகும். இதன் சுவாரஸ்யமான டாப்பிங்குகளும், கிரீமியான அவகேடோவும் இந்த செய்முறையை அனைவரும் விரும்பும்படி செய்கின்றன.



## தேவையான பொருட்கள்

- முழு தானிய ரொட்டி – உங்கள் விருப்பப்படி – ஆறு துண்டுகள் எடுத்துக்கொள்வோம்
- பழுத்த அவகாடோ (தோல் நீக்கி, துண்டுகளாக்கப்பட்டது) – 1
- எலுமிச்சை சாறு – 1 தேக்கரண்டி
- உப்பு மற்றும் மிளகு – உங்கள் விருப்பப்படி
- பூண்டு தூள் – ½ தேக்கரண்டி
- உங்களுக்கு விருப்பமான மசாலாப் பொருட்கள்
- மேல் அலங்காரங்களுக்கு –
    - நறுக்கிய வெள்ளரிக்காய் – ¼ கப்
    - நறுக்கிய சிவப்பு குடைமிளகாய் – ¼ கப்
    - நறுக்கிய சிவப்பு வெங்காயம் – ⅛ கப்
    - நறுக்கிய வெங்காயத்தாள் – ⅛ கப்
    - நொறுக்கப்பட்ட ஃபெட்டா சீஸ் — ⅛ கப்
    - மாதுளை விதைகள் – ⅛ கப்

## எப்படித் தயாரிப்பது

படி 1 : ரொட்டித் துண்டுகளை 425 டிகிரி ய் வெப்பநிலையில் உள்ள அடுப்பில் வைத்து, பொன்னிறமாகும் வரை 3-5 நிமிடங்கள் டோஸ்ட் செய்யவும்.

படி 2 : அவகேடோவை ஒரு கலக்கும் கிண்ணத்தில் வைத்து, உப்பு, மிளகு மற்றும் எலுமிச்சை சாற்றைத் தூவி, மசிப்பான் கொண்டு அந்தக் கலவையை மசிக்கவும்.

படி 3 : மசித்த அவகேடோ கலவையை டோஸ்டின் மீது சமமாகப் பரப்பி, உங்கள் குழந்தை விரும்பும் டாப்பிங்ஸ்களை அதன் மேல் வைக்கவும்.

படி 4 : ரம்மியமான சூழலில் பல்வேறு சுவைகளை ரசித்துக்கொண்டே உங்கள் குழந்தையுடன் உரையாடுங்கள்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

# பயிர் சாகுபடிக்கு ஏற்ப மட்டுமே யூரியா மற்றும் டிஏபி-யை வழங்க வேண்டும்

## விவசாயிக்கு அதிகளவில் உரங்களை வழங்கக்கூடாது

பெரம்பலூர், ஏப்.21

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் பாபு அறிவுரையின்படி வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், பெரம்பலூர் மாவட்டம்,





ஆலத்தூர் வட்டாரத்தில் உரம் விற்பனை நிலையங்களை திடீர் ஆய்வு செய்தார். ஆய்வின் போது உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயியின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும்.

உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப் பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் களைக் கொல்லி உடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். டிஏபி உரங் களும் அதிக அளவு உதவி விவசாயிக்கு வழங்க வேண்டும், நானோ யூரியா, நானோ டி ஏ பி விவசாயிகளுக்கு எடுத்து கூறி பயன்படுத்த வேண்டும். வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகை யான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன் கூறினார்.



# உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோயினை கட்டுப்படுத்த வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை



புதுக்கோட்டை, ஏப்.21

புதுக்கோட்டை மாவட்டத்தில் பயறு வகைப் பயிர்களான உளுந்து மற்றும் பாசிபயறு ஆகியவை விவசாயிகளால் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பயறுவகை பயிர்களில் மஞ்சள் தேமல் நோய் தாக்குதலை ஆரம்பத்திலிருந்தே ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடித்து கட்டுப்படுத்திட வேளாண் இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி ஆலோசனை தெரிவித்து உள்ளார்.

**மஞ்சள் தேமல் நோய் தாக்குதலின் அறிகுறிகள்**

● பாதிக்கப்பட்ட செடிகளில் உள்ள இளம் இலைகளில் மஞ்சள் நிற புள்ளிகள் தோன்றி பின்பு மஞ்சளும் பச்சையும் கலந்த மஞ்சள் தேமல் போல் காணப்படும்.

● புதிதாக உருவாகும் இலைகள், முழுவதுமாக மஞ்சள் நிறமாகி காணப்படும்.

● பாதிக்கப்பட்ட செடிகள் வளர்ச்சி குன்றிக் காணப்படும்.

● பாதிக்கப்பட்ட செடிகளில் காய்களின் எண்ணிக்கை குறைவதோடு, காய்களும் மஞ்சள் நிறமடையும்.

● இந்நோயானது நச்சுயிரி (வைரஸ்) எனப்படும் உளுந்து மஞ்சள் தேமல் நச்சுயிரி மூலம் ஏற்படக்கூடிய நோயாகும்.

● இந்நோய் பாதிக்கப்பட்ட செடிகள் மற்றும் வயல்களிலிருந்து மற்ற பாதிக்கப்பட்டாத செடிகள் மற்றும் வயல்களுக்கு சாறு உறிஞ்சும் பூச்சிகளான வெள்ளை ஈக்கள் மூலம் பரவுகின்றது.

**இந்நோயை கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகளை கடைபிடித்து நன்கு கட்டுப்படுத்தலாம்.**

● நோய் எதிர்ப்பு உளுந்து இரகங்களான வம்பன் 10 மற்றும் வம்பன் 12 போன்ற ரகங்களை பயன்படுத்த வேண்டும்.

● விதைப்பதற்கு முன்பாக ஒரு கிலோ விதைக்கு 5 மிலி இமிடா குளோப்ரிட் 600 FS என்றளவில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.



● நோய் எதிர் உயிர்க்கொல்லியான பேசில்லஸ் சப்டிலிஸ் என்ற பாக்டீரியா கலவையை ஏக்கருக்கு 1 கிலோ என்றளவில் நன்கு மக்கிய தொழுவுரம் 100 கிலோவுடன் கலந்து வயலில் இட வேண்டும்.

● வயலில் வரப்பைச்சுற்றி மக்காச்சோளப் பயிரினை 2 வரிசை வீதம் வரப்பு பயிராக பயிரிட வேண்டும்.

● மஞ்சள் தேமல் நோய் தென்பட்டவுடன் ஒரு சில பாதிக்கப்பட்ட செடிகள் இருக்கும் நிலையில் அவைகளை உடனடியாக பிடுங்கி அழித்தல் வேண்டும்.


● வயலில் ஏக்கருக்கு 5 என்ற வீதத்தில் மஞ்சள் நிற ஒட்டுப் பொறிகளை அமைத்து வெள்ளை ஈக்களை கண்காணிக்க வேண்டும்.

● ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் போராக்ஸ் மற்றும் 10 சத நொச்சி இலைச்சாறு கலந்த கரைசலை விதைத்த 30 நாட்கள் கழித்து தெளிக்க வேண்டும்.

● தேவைக்கேற்ப, நச்சுயிரிகளை பரப்பும் வெள்ளை ஈக்கள் தென்பட்டால் ஏக்கருக்கு 100 கிராம் அசிட்டாமிப்ரிட் 20 WP அல்லது 40 கிராம் தையோமீத்தாக்சம் 75 WG அல்லது 100 மிலி இமிடாகுளோப்ரிட் 17.5 SL ஆகிய பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

எனவே, விவசாயிகள் மேற்கண்ட ஒருங்கிணைந்த நச்சுயிரி நோய் மேலாண்மை முறைகளை பயன்படுத்தி பயறுவகை பயிர்களை தாக்கும் மஞ்சள் தேமல் நோயினை கட்டுப் படுத்தலாம் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், மு.சங்கரலட்சுமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# இன்று - உலக பூமி தினம் - ஓர் பார்வை

உலகம் முழுவதும் உலக பூமி தினம் (WORLD EARTH DAY) ஏப்ரல் 22 ஆன இன்று கொண்டாப்பட்டு வருகிறது.

பூமியையும் அதன் சுற்றுச் சுழலையும் பாதுகாக்க வேண்டியதன் அவசரத் தேவையை வலியுறுத்துவ தற்கும் சுற்றுச்சுழலின் முக்கியத்துவத்தை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்து வதற்கும் இந்த தினம் அர்ப் பணிக்கப்பட்டுள்ளது.




**இந்த தினத்தின் கருப்பொருள் (THEMES) என்ன?**

நமது பூமியில் முதலீடு செய்யுங்கள் என்பது தான் இந்த ஆண்டின் முழுக்கமாக உள்ளது.

**இந்த தினம் எப்படி? ஏன்? உருவானவது?**

கடந்த 1960-யில் தொழிற்துறையில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாக அமெரிக்காவில் உள்ள கலிப்போர்னியாவில் ஏற்பட்ட எண்ணெய் கசிவு காரணமாக கடல் வாழ் உயிரனங் களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து அமெரிக்காவின் செனட்டர் கெய்லார்ட் நெல்சன் என்பவரின் முயற்சியால் ஏப்ரல், 22, 1970 முதல் 'உலக பூமி தினமாக' அனுசரிக்கப்பட்டு வருகிறது. இன்று 190க்கும் மேற்பட்ட நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

**பூமியை பாதிக்கும் செயல்கள் என்னென்ன ? தெரியுமா?**

**1) காலநிலை மாற்றம்**

புதைப்படிவ எரிப்பொருட்கள் எரிப்பதால் உண்டாகும் பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றம். புவிவெப்ப மாயமாதல் போன்றவை.

**2) பல்லுயிர் இழப்பு**

காடுகள், வனங்கள் அழிக்கப்படுவதால் பல்லுயிர் தாவரங்கள் விலங்குகள் போன்ற இனங்கள் அழிவு.

**3) பிளாஸ்டிக் பயன்பாடு**

இதனுடைய கழிவுகள் எளிதில் மக்காத மண் நீரில் இருப்ப தால் மாசு ஏற்படுதல்.

**இதுபோன்ற காரணங்களால் பூமி சிதைக்கப்பட்டு வருகிறது. அதனை பாதுகாக்க நாம் என்ன முதலீடு செய்ய வேண்டும். தெரியுமா?**

1) மரம் நடுதல் – ஒவ்வொருவரும் தலா 10 மரங்களை நட வேண்டும்.

2) பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைத்து மஞ்சள் நிற பை துணிபை களை பயன்படுத்திடல்.

3) ஆற்றல் சேமிப்பு


4) கார்பன் மாசு குறைப்பு

உலக பூமி தினத்தில் பூமியின் எதிர்காலம் நம்முடைய கையில் தான் உள்ளது என்பதை நாம் ஒவ்வொரு வரும் உணர வேண்டும். பூமிக்கு நாம்

செய்யும் ஒவ்வொரு முதலீடு நம்முடைய எதிர்கால சந்ததிக்கு செய்யும் வளமான வாழ்க்கைகான டெபாசிட் (DEPOSIT).

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# விதையின் முளைப்புத்திறன் அறிந்து உயர் மகசூல் பெறுவீர்!

திருநெல்வேலி விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் ஒவ்வொரு பயிருக்கும் முளைப்புத்திறன் பரிசோதனை மேற்கொள்ளப் படுகிறது. முளைப்புத்திறன் என்பது விதையின் உயிரும் வீரியமும் கொண்டு இயங்குவதைக் காட்டுவது ஆகும். நல்ல முளைப்புத்திறன் கொண்ட விதைக்குவியல்களிலிருந்து விதைக் கப்படும் விதை மூலம் அதிக பயிர் எண்ணிக்கையில் பயிர்கள் வயலில் செழித்து வளரும். ஆனால் முளைப்புத்திறன் குறைந்த விதைகளை பயன்படுத்தினால் குறைந்த அளவிலேயே பயிர் எண்ணிக்கைகள் இருக்கும். அதனால் மகசூல் பாதிக்கப்படும்.

விதைச்சட்டம் 1966 பிரிவு 7(பி)ன்படி ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச முளைப்புத்திறன் தரம் நிர்ணயம் செய்து அறிவிக் கப்பட்டுள்ளது. மக்காசோளத்திற்கு-90 சதவீதமும், நெல், எள், கொள்ளு ஆகியவற்றிற்கு-80 சதவீதமும், கேப்பை, சோளம், கம்பு, வீரிய ஒட்டு பருத்தி, பயறு வகைகள் ஆகியவற்றிற்கு-75 சதவீதமும், நிலக்கடலை, சூரியகாந்தி போன்ற இனங்களுக்கு-70 சதவீதமும், இரக பருத்திக்கு-65 சதவீதமும், மிளகாய்க்கு-60 சதவீதமும் குறைந்தபட்ச முளைப்புத்திறன் இருத்தல் வேண்டும்.

பயிர்களுக்கு ஏதுவான சூழ்நிலையில் விதையின் கருமுளை விட்டு பின்னர் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான பாகங்கள் உருவாகி இயல்பான செடியாகுவதற்குரிய திறனே முளைப்புத் திறன் ஆகும். முளைப்புத்திறன் சோதனையின் போது விதை முளைத்து செடியாக வளரும் தன்மையை பொறுத்து இயல்ப ானது, இயல்பற்றது, கடினமானது, உயிரற்றது என 4 வகைப் படுத்தி சோதனை முடிவுகள் அறிவக்கப்படும், இவற்றில் கடின விதை என்பது விதை உறையின் கடினத் தன்மை காரணமாக நீர் உட்புக இயலாத காரணத்தினால் முளைவிடாமல் இருக்கும், பயறுவிதைகள் மற்றும் வெண்டை விதைகளில் இவை தனியாக எடுத்து கணக்கிடப்படும், இவைகள் வயல்களில் முளைப்பதற்கு சாத்தியக் கூறு உள்ளதால் முளைப்புதிறன் கணக்கிடும் போது இயல்பான விதைகளுடன் சேர்த்துக் கணக்கிடப்படும். மேற் கண்ட முறைகளின் படி முளைப்புத்திறன் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு குறிப்பிட்ட கால அளவுகளில் பயிர்களின் முளைப்புத் திறன் கணக்கிடப்பட்டு சோதனை முடிவுகள் அறிவிக்கப்படும்.

எனவே. விவசாயிகள் தங்கள் சொந்த விதைகளை விதைக்கும் போது தங்கள் விதைகளின் முளைப்புத்திறன் அறிந்து விதைத்திட தங்கள் சேமித்து வைத்திருக்கும் விதைக்குவியலில் மாதிரி ஒன்று எடுத்து அதில் பயிர், ரகம் மற்றும் தேவைப்படும் பரிசோதனை விவரம் எழுதி(றீஜிணசிளீறீ) வலைதளம் மூலமாக பதிவு செய்து, விதை கட்டணமாக ரூ.80/- செலுத்தி திருநெல்வேலி விதை பரிசோதனை நிலையத்தில் விதைகளின் முளைப்புத்திறன் தெரிந்து விதைத்திடுமாறு திருநெல்வேலி விதைப்பரிசோதனை அலுவலர், ஞா.ஆனந்தி ராதிகா தெரிவித்தார்.




# நவீன வேளாண்மையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு!

முழுமையான ஆரோக்கியத்திற்கு சத்தான உணவு மிகவும் அவசியம். ஆனால் நாம் தினமும் உணவை மட்டும்தான் உட்கொள்கிறோம் என்று எவராலும் சொல்லமுடியாது. உணவுடன் பூச்சிக்கொல்லியையும் சேர்ததே உண்ணுகிறோம். உலகில் 60 சத மக்கள் உடலில் ஏதாவது ஒரு பூச்சி கொல்லி உள்ளது என புள்ளி விபரம் தெரிவிக்கிறது. ஆகையால் நஞ்சற்ற உணவு உற்பத்திக்கு விவசாயத்தை நிலைநிறுத்தி வருங்கால தலைமுறைகளுக்கு ஆரோக்கியத்தை வழங்கிட விவசாயிகளை தயார் படுத்த வேண்டும். அனதால் பூச்சி கொல்லியை பயன்படுத்துவதைப் பற்றிய விழிப்புணர்வு மிக அவசியமாகும்.

பொதுவாக பூச்சி, புழுவை பார்த்தாலே, பூச்சிக் கொல்லி தெளிக்கனும் என்கிற உள்ளுணர்வு வந்துவிடும். அது முற்றிலும் தவறு பொருளாதார சேத நிலையை தாண்டி (ETL - Economical Threshold Level) பின்பு தான் பூச்சி கொல்லி பயன்படுத்த வேண்டும். 100 மி.லி ஒரு பூச்சி கொல்லியை தெளித்தால் அதில் 10 மிலி மட்டுமே அதற்கான பூச்சி புழுவின் மேல்படுகிறது. மீதமுள்ள 90 மிலி சேதமாகி நீர் காற்று மண் மற்றும் விலங்கு தாவரம் மனிதன் இவற்றில் படிந்து பெரும் சுற்றுப்புற சுகாதார கேடுகளை விளைவிக்கிறது.

விவசாயிகள் பயிர்களில் தோன்றும் அறிகுறிகளை (Symptoms) கவனித்து அதற்காக பூச்சி கொல்லிகளை தெளிக்கிறார்கள். ஆனால் அறிகுறிகளை ஏற்படுத்திய பூச்சியையோ, நோய் காரணிகளையோ கண்டுபிடித்து தெளிப்பதில்லை. உதாரணமாக காய்ப்புழுவின் தாக்கம் காரணமாக காய்ப்




புழுவின் ஓட்டை, எச்சம், காய்ந்து விடுதல், இலை, வாடல், கிளை காய்ந்து போதல் இவற்றிற்காக செடியின் மீது பூச்சி கொல்லி தெளித்தால் பூச்சி கொல்லி செலவே வீண். இது எல்லா புழு பூச்சி வண்டு மற்றும் நோய்க்கும் பொருந்தும் இதற்குதான் அறிகுறி தென்பட்டவுடன் பூச்சி கொல்லி தெளிக்காமல், அதன் காரணியை கண்டுபிடித்து அதன் பின் தெளிக்க வேண்டும். இந்த உலகில் பூமி தோன்றியவுடன், ஒரு செல் அமீபா, பூச்சி தாவரம் விலங்கு வந்த பிறகு மனிதன் தோன்றினான். காலப்போக்கில் மனிதன் தன் தேவைக்காக தாவரங்களை உணவுப் பயிராகவும் மற்ற பூச்சி பூஞ்சானம் பாக்டீரிய வைரஸ்களை தமது எதிரியாகவும் கருதி அவற்றை கட்டுப்படுத்த அல்லது அழிக்க ஆரம்பித்தான்.

உண்மையில் பூச்சி புஞ்சானம், விலங்குதான் நமக்கு முன் இந்த பூமியில் தோன்றியவைகள். அவற்றை அழிக்க நினைத்தால் புதிய பூச்சி, நோய் தாக்குதல்கள் தான் ஏற்படும். பயிர் பாதுகாப்பில் எடுத்தவுடனே பூச்சி கொல்லி தெளிப்பதை விவசாயிகள் விரும்புகின்றனர். இது நல்ல போக்கே அல்ல. ஏராளமாக ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் உள்ளன. அவற்றை பின்பற்றுவது தான் சுற்றுப்புறச் சூழலுக்கும் நஞ்சமற்ற உணவு உற்பத்திக்கும் நல்ல வழி.

உதாரணமாக நடுரோட்டில் ஒரு பெரும் கும்பல் மறியல் செய்தால் உயர் காவல்துறையினர் அவர்களை முதலில் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம் செய்ய வேண்டும். இல்லையென்றால் எச்சரிக்கை விடுத்து தண்ணீர் பீச்ச வேண்டும். அடுத்து கண்ணீர் புகை, அடுத்து தடியடி,

அப்போதும் முடியாது போனால்தான் துப்பாக்கி சூடு நடத்த வேண்டும். (அதுவும் அனுமதி பெற்று) இது தான் உயர் காவல் துறை அதிகாரியின் கடமை, நன்நடத்தை அழகு என்று கூட சொல்லாம். ஆனால் எடுத்தவுடனே, துப்பாக்கி சூடு நடத்தினால் அவரது பதவி போவது மட்டுமின்றி பதட்டமும் அதிகரிக்கும்.

அது போலத்தான் பயிர் பாதுகாப்பில் எடுத்தவுடனே பூச்சி கொல்லியை நாடுவது அல்லது தெளிப்பது துப்பாக்கி சூட்டிற்கு சமம். எனவே ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளே மாறி வரும் காலத்திற்கு சிறந்தது.

தகவல் : *T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலைப்பேட்டை.*

# கந்தர்வகோட்டை பகுதியில் கரும்பு சாகுபடியில் விவசாயிகள் தீவிரம்

புதுக்கோட்டை, ஏப்.21

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் உள்ள விவசாயிகள் தஞ்சை மாவட்டம் குருங்குளம் அறிஞர் அண்ணா சக்கரை ஆலையில் பதிவு செய்து கரும்பு பயிர் செய்து வருகிறார்கள்.

இந்நிலையில் கரும்பு வெட்டி ஆலைக்கு அனுப்பிய நிலையில் இரண்டாம் பருவ பயிர் துளிர்ந்து வருகிறது. இப்பகுதியில் போதிய மழையில்லாதாதல் ஆழ்துளை கிணற்றில் இருந்து நீர் பாய்ச்சி விவசாயம் செய்து வருகிறார்கள்.

இது குறித்து விவசாயிகள் கூறும்போது, இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்து உள்ளது எனவும், கரும்பு தோட்டத்திற்கு நீர் பாய்ச்ச போதிய நீர் இல்லை என்றும், ஆகையால் இப்பகுதிக்கு காவேரி – வைகை – குண்டாறு இணைப்பு திட்டதை விரைவுபடுத்தி இதில் கிளை வாரி வெட்டி கந்தர்வகோட்டை ஒன்றியமும் பயன் அடையும் நிலைக்கு கொண்டு வரவேண்டும் என விவசாயிகள் கேட்டுக் கொள்கிறார்கள்.

மேலும் ஒன்றிய அரசு கரும்புக்கு கூடுதல் ஊக்கதொகை வழங்க வேண்டும் என்றும் இப்பகுதி சக்கரையை வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் எனவும், சக்கரை ஆலையில் ஒதுங்கும் கழிவுகளை பகிரங்க ஏலம் விட்டு அதனை கரும்பு விவசாயிகளுக்கு பகிர்ந்து அளிக்க ஆலை நிர்வாகம் முன்வரவேண்டும் என்றும், இவ்வாறு கூடுதல் லாபம் கிடைந்தால் மட்டுமே விவசாயிகளுக்கு கரும்பு விவசாயத்தில் லாபம் கிடைக்க வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# கறவை மாடுகளில் உற்பத்தியை பாதிக்கும் கால்குளம்பு நோய்

சமீப காலங்களில் மாடுகள் கால்குளம்பு நோயால் அதிகம் பாதிக்கப்பட்டு பால்பண்ணைத் தொழிலில் பொருளாதார நட்டத்தை ஏற்படுத்துகின்றன.

இந்நோயானது கன்று ஈனும் பருவத்திலுள்ள மற்றும் கன்று ஈன்ற இளம் மாடுகளையும் அதிக அளவில் பாதிக்கின்றன. மாடுகள் வளர்ப்போர் மாடுகளில் கால் குளம்பு நோயை உண்டாக்கும் காரணிகளை அறிந்து நோய் வராமல் தடுக்கும் பராமரிப்பு முறைகளை மேற்கொண்டால் இந்நோய் தாக்காமலும் இந்நோயால் பொருளாதார இழப்பு ஏற்படாமலும் தவிர்க்க முடியும்.

**நோய்க் காரணிகள்**

சுற்றுப்புறச் சூழ்நிலைகளும், தீவனமளிக்கும் முறைகளும், உடற்பயிற்சி இல்லாமையும் இந்நோய் ஏற்பட முக்கியக் காரணங்களாகும். மாட்டுக் கொட்டகையில் மாடுகள் சாணம் மற்றும் சிறுநீர் கலந்த கழிவுகளில் நிற்பதால் அதன் குளம்புகள் பலமிழந்து விடுவதாலும், புதிய கொட்டகைக்கு இடமாற்றம் செய்தவுடன் மாடுகள் சுற்றுப்புறச் சூழலுக்கு பழக்கமில்லாமல் அதிக நேரம் நிற்பதிலேயே செலவிடுவதால் கால் குளம்புகள் சோர்ந்து விடுவதாலும் கால்குளம்பு நோய் ஏற்படுகிறது. தீவனத்தில் அதிகப் படியான மாற்றம் செய்வதாலும், குறைந்த அளவு நார்த்தீவனம், அதிக அளவு கலப்புத் தீவனம் அளிப்ப தாலும் மாடுகளில் அதிக அளவு லாக்டிக் அமிலம் சுரப்பதால் கால்குளம்பு நோய் ஏற்படுகிறது. அதிகப் புரதச் சத்துள்ள உணவு வகைகளை அளிப்பதாலும் இந்நோய் ஏற்படுகிறது. அதிக அளவு புரதச் சத்தினால் உணவுப் பாதையில் ஹிஸ்டமின் என்ற வேதிப்பொருள் உண்டாகி அவை குளம்புகளை பாதித்து இந்நோய் ஏற்படுகிறது. கர்ப்பப்பை நோய், நஞ்சுக்கொடி தங்குதல் மற்றும் மடிவீக்க நோய் போன்ற நோய்களால் பாதிக்கபட்ட மாடுகளிலும் இந்நோய் காணப்படுகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

## நோய் தோன்றும் முறை

அதிக அளவு அரிசி சம்பந்தப்பட்ட பொருட்களை மாடுகளுக்குத் தரும்பொழுது லாக்டிக் அமிலம் அதிகம் சுரந்து வயிற்றிலிருந்து குளம்புகளுக்கு இரத்த நாளங்கள் வழியாகச் செல்லும். நஞ்சுக் கொடி வெளியே வராமல் கர்ப்பப்பையிலேயே தங்கினால் அல்லது கர்ப்பபை நோய் மாடுகளில் காணப் பட்டால் நுண்ணுயிர்க்கிருமிகள் நச்சுப் பொருளை ஏற்படுத்தி கர்ப்பப்பையிலிருந்து குளம்புகளுக்கு செல்லும். அதிக புரதச்சத்துள்ள உணவை உண்ணும் பொழுதும் கர்ப்பப்பை நோயிலும் ஹிஸ்டமின் உற்பத்தியாகி குளம்புகளுக்குச் செல்லும். இவ்வாறு குளம்புகளுக்குச் செல்லும் லாக்டிக் அமிலம், நுண்ணுயிர்க்கிருமி நச்சு, ஹிஸ்டமின் என்னும் வேதிப்பொருள் ஆகியவை இரத்த நாளங்களை பருக்கச் செய்கின்றன. இதனால் இரத்தக் குழாய்களில் இரத்தக் கசிவு ஏற்பட்டு பின் அடைப்பு ஏற்பட்டு பாதங்களில் வீக்கத்தை உண்டு பண்ணுகின்றன.

## நோயின் அறிகுறிகள்

நோய் தீவீரமாக இருக்கும் பொழுது கால் வலியினால் மாடுகளின் முதுகுப்புறம் வளைந்து காணப்படும். மாடுகள் நடப்பதற்கு சிரமப்படும்.

முன்னங்களால்களை குறுக்காக வைத்துக் கொள்ளும். மாடுகள் படுத்துக் கொண்டேயிருக்கும். எழுவதற்கும் எழுந்து நிற்பதற்கும் சிரமப்படும்.

எழும் பொழுது அதிக நேரம் முட்டி போட்ட நிலையிலேயே இருக்கும். நடக்கும் பொழுது வலி அதிகம் இருப்பதால் கால்களை விரைவில் எடுத்து முன்னே வைக்கும்.

வியர்வையுடன் நடுக்கமும், தசைகளின் உடல் அதிர்வும் காணப்படும். குளம்புகள் சூடாகவும், குளம்பின் மேல் பகுதி சிவந்தும் காணப்படும். குளம்புகளில் இரத்தக் கசிதலும் உள்ளங்கால்களில் ஆறாத புண்ணும் தோன்றும்.

நாள்பட்ட கால்குளம்பு நோயில் அறிகுறிகள் குறைந்த தீவிரத்துடன் காணப்படும். வியர்வை, நடுக்கம். உடல் அதிர்வு இருக்காது. குளம்புகள் நீண்டும், அகன்றும், தட்டையாகவும் வெடிப்புகளுடன், குளம்புகள் சுழன்று தோற்றம் மாறியும் இருக்கும்.

### நோய் கண்டறியும் முறைகள்

அறிகுறிகளின் மூலமும், பாதிக்கப்பட்ட குளம்புகளை பரிசோதனை செய்வதன் மூலம் கால்குளம்பு நோயை கண்டறியலாம்.

### சிகிச்சை முறை

1. ஐஸ்கட்டிகள் கலந்த அல்லது குளிர்ந்த தண்ணீரை கால்களில் ஊற்ற வேண்டும். இதனால் வீக்கமானது குறையும்.

2. கழிச்சலை உண்டுபண்ணும் மருந்தை கால்நடை மருத்துவர் உதவியுடன் அளிப்பதன் மூலம் வயிற்றிலுள்ள நச்சுப் பொருட்கள் கழிச்சலின் மூலம் வெளியேற்றப்பட்டு விடும்.

3. வலிநீக்க மருந்துகளும் அழற்சியைக் கட்டுப்படுத்தும் மருந்துகளும் கால்நடை மருத்துவர் உதவியுடன் கொடுக்கப்பட வேண்டும்.

4. இந்நோயுடன் கர்ப்பப்பை அழற்சி நோய், மடிவீக்க நோய். நஞ்சுக்கொடி தங்குதல் போன்றவையும் இருந்தால் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளும் தரப்பட வேண்டும்.

5. அரிசி சம்பந்தப்பட்ட பொருட்களைக் கொடுப்பதை தவிர்க்க வேண்டும்.

6. வயிற்றில் அமிலத்தன்மை ஏற்படாமல் இருக்க தினமும் 30கிராம் சோடா உப்பை தீவனத்துடன் கலந்து தர வேண்டும்.

7. நாட்பட்ட நோயாக இருந்தால் மாடுகளில் அதிகப் படியாக வளர்ந்த குளம்புகளை வெட்டி விட வேண்டும்.

### தடுப்பு முறைகள்

சிறந்த மேலாண்மை முறைகளின் மூலம் அடிக்குளம்பு அழற்சி நோய் வரமல் தடுக்கலாம்.

1. திடீரென்று கலப்புத் திவனத்தில் மாற்றம் செய்யக்கூடாது.

2. அரிசி மற்றும் அரிசி சம்பந்தப்பட்ட பொருட்களை மாடுகளுக்குத் தரக்கூடாது

3. நார்த்தீவனம் அதிகம் தர வேண்டும்.

4. கன்று ஈனப்போகும் காலங்களில் ஒரு நாளைக்கு குறைந்தது அரை மணி நேரமாவது நடக்க அனுமதிக்க வேண்டும்.

5. கொட்டகை அமைப்பை சரி செய்ய வேண்டும்.

6. வயிற்றில் அமிலத் தன்மை ஏற்படாமல் இருக்க சோடா உப்பை 30 கிராம் அளவு தினமும் கலப்புத் தீவனத்த்ஸ்ரீல் கலந்து தர வேண்டும்.

7. அடர் தீவனம் தருவதற்கு முன் சிறது பசுந்தீவனம் தந்தால் அமிலம் அதிகம் உற்பத்தியாவதைத் தவிர்க்கலாம்.

தகவல் : ***முனைவர் இரா.உமாராணி, பேராசிரியர், கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.***

# தக்காளி கிலோ ரூ.28 ஆக அதிகரிப்பு

தர்மபுரி, ஏப்.21

தர்மபுரி மாவட்டத்தில் மொரப்பூர், பாலக்கோடு, காரிமங்கலம், அரூர், பாப்பாரப்பட்டி, பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் 15 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தக்காளி பயிரிட்டுள்ளனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாக கடும் வெயில் காரண மாக தக்காளி வளர்ச்சி இல்லாத காரணத்தால் பறிக்காமல் செடியி லேயே விவசாயிகள் விட்டு விட்டனர். வரத்து குறைவால் ஒரு கிலோ தக்காளி ரூ.28க்கு விற்பனை செய்யப்படுகிறது.

